453

தேவஸ்தான் வெளியீடு 1.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.

ஸ்ரீ சபாபதிநாவலர்

O-,12MSN1,T
N62
113242

நந்தன — வைகாசி

1952.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து

மஹாவித்துவசிரோமணி

ஸ்ரீ சபாபதிநாவலரவர்கள்

இயற்றிய

திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி

அவ்வாதீனத்து

21-வது குருமஹாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள்

கட்டளையிட்டருளியபடி

—— ० ——

அவ்வாதீன வித்துவான்

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையால்

பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது.

நந்தன — வைகாசி — வசந்த விழா

1952.

குறிப்பு:—இவ்வெளியீடு வேண்டுவோர் திருவிடைமருதூர் தேவஸ்தானத்துக்கு 0—2—0 அணு தபால் தலைச்சீட்டு அனுப்பிப் பெற்றுக்கொள்க.

உ

சிவமயம்

முகவுரை.

'திருவிடைமருதூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் இவ் வந்தாதி நூலை இயற்றியர் ஸ்ரீ சபாபதிநாவலர் என்னும் புலவர்பெருமான். இவர், திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவ சிரோமணி. இவர் பிறந்த இடம் யாழ்ப்பாணத்து வடகோவை. பரம்பரைச் சைவ வேளாளர். சுயம்புநாத பிள்ளை என்பவர் இவர் தந்தையார்: தாயார் தெய்வயானையம்மையார். யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் மருகரும் மாணவரும் ஆகிய ஸ்ரீ பொன்னம்பல பிள்ளையவர்களிடம் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகக்கற்றவர். நீர்வேலி—ஆசிரியர் சிவசம்புப் புலவரும் இவருடைய வித்தியா குரு ஆவார். வடமொழி தமிழ் மொழிகளில் இவர் மிக வல்லுநர். வடமொழிக் கடலையும் தென்தமிழ்க் கடலையும் நிலைகண்டுணர்ந்த இவ் வாதீனத்துத் திராவிட மாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளைத் தமது உபாசனா மூர்த்தமாகக் கொண்டவர். திருவாவடுதுறை யாதீனத்துப் பதினாறுவது குருமகா சந்நிதானம் மேலகரம்—ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள்பால் சிவஞானோபதேசமும் சிவ ஞானபோத முதலிய சித்தாந்த சாஸ்திரோபதேசமும் பெற்றவர். கம்பீரமான தோற்றப் பொலிவுள்ளவர். அஞ்சா நெஞ்சினர்.

இவருடைய மாணவர்களாய்ச் சிறந்தவர்கள் மாகறல் — கார்த்திகேய முதலியார், மருகர் — சிவப்பிரகாச பண்டிதர், சிதம்பரம்—அ. சோமசுந்தரமுதலியார், கொன்றை மாநகரம்— பாலசுந்தர முதலியார் முதலிய பலர். இவர் இயற்றிய வேறு நூல்கள் — 1. சிதம்பர சபாநாத புராணம், 2. திராவிடப்

பிரகாசிகை, 3. சதுர்வேததாற்பரியசங்கிரகம், 4. பாரத தாற்பரியசங்கிரகம், 5. இராமாயணதாற்பரியசங்கிரகம், 6. சிவகர்ணாமிர்தம், 7. ஞானசூடாமணி, 8. இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு, 9. வைதிக காவிய தூஷண மறுப்பு, 10. ஞானாமிர்தம், 11. திருச்சிற்றம்பலவந்தாதி, 12 மாவைபந்தாதி, 13. சிதம்பரம் பாண்டிநாயக மும்மணிக் கோவை, 14. வடகோவைச் செல்வ விநாயகர் இரட்டை மணிமாலை, 15. நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், 16. வதரிநகர்த் தண்டபாணிக் கடவுள் பதிகம், 17. புறவார் பனங்காட்டூர்ப் புறவம்மை பதிகம், 18. ஏசுமத சங்கற்பநிராகரணம் முதலியன. ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் அருளிச் செய்த 1. சித்தாந்த மரபு கண்டன கண்டனம், 2. சிவசம வாதவுரை மறுப்பு, 3. எடுத்து என்னும் சொல்லுக்கிட்ட வைரக் குப்பாயம் என்னும் இவைகளையும் ஆராய்ந்து அச்சிட்டார்கள். இவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவர். இத்தலத்துக்கு மூவர் தேவாரத் திருப்பதிகங்களும், திருவிசைப்பாவும் உண்டு. இத்தலத்தைப்பற்றிய வேறு தமிழ் நூல்கள்: 1. திருவிடைமருதூர்ப் பழைய புராணம், 2. மருதவனப் புராணம், 3. மும்மணிக்கோவை, 4. உலா. 5. திரிபந்தாதி, 6. யமகவந்தாதி, 7. நொண்டி நாடகம் முதலியன. வடமொழி நூல்களும் உள. இவ்வாதீனத் துக்குச்சொந்தமான மத்தியார்ச்சுனம் கோவில் டிரஸ்டி ஸ்தானீகமும், இவ்வாதீன அடியார் குழாத்தில் ஒருவரும் ஆகிய ஸ்ரீமத்-குமாரசாமித்தம்பிரான் சுவாமிகள் விருப்பப்படி இதனை அச்சிட்டுதவ ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தில் கட்டளை யிட்டருளினார்கள்.

இங்ஙனம்,

திருவாவடுதுறை
2—6—52.

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,
ஆதீனவித்துவான்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர்ப்
பதிற்றுப்பத்தந்தாதி.

காப்பு.

மதிவளரு மணிமாட வரிசைதிகழ் தருமருதப்
பதிவளர்மா லிங்கேசர் பதமலரி னணுபாக்குத்
துதிவளரும் பதிற்றுப்பத் தந்தாதி தொடுக்கமத
நதிவளருங் கரடகய முகப்பெருமா னடிநயப்பாம்.

குருவணக்கம்.

தாவடுநற் றிருக்கயிலைத் திருநந்தி மரபுநனி தழைக்கப் போந்த, தேவடுவொன் றில்லாத மாதவத்தோ ரகவிருளைச் சீக்கும் பானு, மாவடுவின் வகிரன்ன கண்ணிவழி படமாசின் மணிதான் மேவு, மாவடுதண் டுறைசையிற்சுப் பிரமணிய தேசிகன்றா ளடைந்துய்ந் தேனல்.

சிவஞானயோகிகள் வணக்கம்.

பொய்ஞ்ஞானச் சமயர்புகல் பிணக்குரைகள் புரைபட்டுப் புறம்போய் வீய, உய்ஞ்ஞான சித்தாந்த சைவமொழி பொருளுண்மை யுலகந்தேற, மெய்ஞ்ஞான வளந்தருநற் சிவஞான பாடியந்தென் மொழியான் மேவச், செய்ஞ்ஞானத் துறைசைவரு சிவஞான யோகிகள்செஞ் சரணம் போற்றி.

நூல்

கார்வளர்பூம் பொழிற்கணெழிற் பசுந்தோகை மயி லாடக் களியார் வண்டு, சீர்வளரின் னிசைபாடுந் திரு விடைமாமருதூர்வாழ் சிவனூர் தெய்வ, நார்வளர்மெய் யடி யர்மனத் திருக்கோயில் பிரியாது நயந்தாங் கன்னோர், பேர் வளரென் னுளக்கமல பீடிகையுங் கோயில்கொண்டு பிரியா ரன்றே. (1)

அன்றேயா ணவவிருளி னழுந்தியறி விழந்துகிடந் தேனை யாங்கு, நின்றேமா யக்குரம்பை யெடுத்திட்டா யதுகருணை நீர்மை யாகிற், பொன்றுநின் னருட்கடலி னுள்ளிருத்திச் சிவானந்த போக நல்காய், குன்றுமென் முலையுமையாள் வழிபடமா மருதூர்வாழ் கோமா னீயே.

நீயேக நாயகனு னின்க்கென்று மீளாத வடிமையேன் யான், பேயேனே யெனினுமெனைக் கைவிடுத லுடையாய்க் குப் பெருமையோதான், தாயாய்மெய்த் தந்தையுமாய்த் திருவிடைமா மருதூர்வாழ் சாமீ பொல்லா, மாயாவல் வினைக்கடனின் றெனையெடுத்துன் னடிநிழற்கீழ் வைப்பா யின்னே. (3)

இன்னாத கொடும்பிறவிக் கடனடுவ ணெனைவிட் டெங் கொளித்தா யீது, கொன்னுமோ பெருங்கருணைத் தடங்கடலா முனக்கெங்கள் கோவே வண்டு, தென்னு வென் றிசைபாடத் தேம்பொழினன் மதுவாக்கு மருதூர்ச் செல்வ, மன்னுவென் கண்மணியே யம்மணிக்குண் மணி யாகி வாழும் வாழ்வே. (4)

வாழ்திமட நெஞ்சேநீ வளமருதூ ரடியரொடும் வைகி மூன்று, போழ்துமொரு மாலிங்கப் பெருமானைத் தரிசித்

துப் புரிந்து தாழ்ந்திட், டாழ்துயரக்கடலிடைநின் றெனை யெடுத்தாள் கண்ணுதலே யமல னேபின், தாழ்சடைய வெம்பெருமா னென்றென்றே சாற்றுவினை மாற்றலாமே.

மாருது திருப்பொன்னி வளஞ்சுரக்கு மாமருத மணி யே மெய்ம்மை, தேருதா ரகத்திருளே தெளிந்தார் தமுளத் தொளியே செங்கண் வெள்ளை, யேருமாற் கொருதுணையே யெனக்கிதுபே ராசங்கை யியம்பா யுன்றன், கூருஞ்சிற் சத்திதனின் வேருமாற் சத்திகொண்டகுண மற்றென்னே.

குணமூன்று முனக்கிசையா வாகவுமுற் றறிவாதி குணங்க ளெட்டுந், தணவாம லுன்றனக்கே யுரிமையா விசைந்திட்ட தகுதி யென்ன, அணவாதார்க் கிருள்விடமே யண்மினுர்க் காரமுதே யுமைகோமாட்டி, மணவாளா மணிகண்டா விடைமருதெம் பெருமானே வரத மூர்த்தி.

மூர்த்திதிரு வேகநா யகனுமற் றவனமர்ந்து வாழு மூதூர், சீர்த்துமணி வரன்றிடுகா விரிவலங்கொ ளிடை மருதூ ராகுந்தெய்வத், தீர்த்தமொரு காருணிய வமுதாகு நமரங்கா ளென்னே சென்றங், கார்த்தியுறப் படிந்துறைந் து தரிசித்துய்ந் திடாதவர்நீர் பேணு மாறே. (8)

பேராத கொடும்பிறவிப் பிணிதீர்த்துன் றிருவடிக்கீழ்ப் ப்பிறங்கா நின்ற, ஆராத நிரதிசய் சிவானந்த வமுதார வடியேற் குய்தி, தாராயோ சார்ந்தார்க்குப் பெருங்கரு ணைத் தடங்கடலாஞ் சாமீ தங்கத், தேராருந் திருவீதித் திருவிடைமா மருதூர்வாழ் தேவ தேவே. (9)

தேவார வானந்தத் தெள்ளமுத மடுத்ததிருச் செவிக் கா கெட்டேன், நாவாரப் புழுத்தபுலை நாயினேன் பிதற்று மிந்த நலமில் புன்சொற், பாவாரப் படுங்கொலோ வெம்

பெருமான் பரமேட்டி பரும முத்தக், கோவாரக் களபமு லைக் கோமாட்டிக் கொருகொழுந மருத வாழ்வே. (10)

வேறு.

வாழ்வொன்ற நம்பி மனைமக்கள் சுற்றமாயக்கு மூத் தை மருவித், தாழ்கின்ற வேழை மடநெஞ்சினோர்க டாழ் வார்க டுன்ப சலதி, வீழ்துன்று செய்ய சடையானையென் னை யுடையானை வேத மருதூர்ச், சூழ்கின்ற வைய ரடி பேணு மெய்யர் தோய்வார்க ளின்ப சலதி. (11)

சலமா ரயற்கண் வயன்மாடு மீன்க டாவிக் குதிப்ப வவைதாம், விலகா தெடுத்துள் ளிடுமாறு தாமும் விரை யக் குதித்தல் புரையப், பலமார் கரைக்கு மிசைகா விரித் தெண் டிரையான பாயு மருதூ, ரலையார் சடைக்க டவுளே யெனச்சொ லடியார் துடைப்பர் மிடியே. (12)

மிடி தா னலைப்ப வலமந்து லோபர் வெற்றம் பலங்கள் வினவி, யடிதான் வருந்த நடைகொண்டு நாளு மலையாது வேத மருதூர், குடியா விரும்பி யுறையேகநாத கொடியே மிழைத்த வினைகள், பொடியாக நூறி யடிநீழல் யாங்கள் புகநல்கி டென்பிர் புலவீர். (13)

புலவார் குடற்குட் புழுமூடி யென்பு கொழுவிப் பொ ருத்தி யிறுகப், பலவார் நரம்பு கொடுபின்னி யூன்கள் பல மெத்தி மீது மிளிர்தோ, லலமாக விட்ட படிவக் குரம்பை நணிநம்பி வீணிர் மருதுட், குலவா வமர்ந்த பெருமானை நண்ணல் குறியா திருத்த னெறியோ (14)

நெறியென்று சென்று குழியின் விழுந்து நீடாயு டேயு மகனி, லறிவென்று கொண்டு புறநின்று நாளு மறியாமை யாழு மடவீர், வெறிதுன்று வீயின் மதுவுண்டு வண்டு விளை

யாடு சோலை மருதுட், செறிகின்ற தேனை யெளிதுண்பிர் வம்மின் சித்தாந்த முத்தி நிலையே. (15)

நிலையாமை மீது பலநோயு மூப்பு நிலைநின்று டற்று முடலைத், தலையாயர் தேறி மருதூ ரிருந்த தனியேக நாதர் பணிகள், அலையா திருந்து புரியாமெய் யின்ப மவர்தா ணிழற்க ணடையப், புலையேன் மருண்டு மடவா ரிழிந்த புகழ்வேண்டி நிற்ப தெவனோ. (16)

எவன்வேத நாலு மெழிலாக மங்க ளிருபானொடெட்டு மொழிவா, னெவன்வேதன் விண்டு சிவனோ டிருந்து துரி யங் கடந்த விறைவ, னெவனுதி யான வாறத்து வாவி னுள்ளும் புறம்பு மிவர்வோ, னவனெம்மை யாள மாலிங்க மாகி மருதூ டிருந்த வமலன். (17)

அமலன் னகண்ட னருளன் னிறைந்த வறிவன் னநாதி பகவன், அமலந் துரந்து தனதின்ப வேலை நடுவே யிருத்தல் குறியாக், கமலம் பொதிந்த புதவந் திறந்து மதுவுண்டு வண்டு களிகொள், விமலஞ் செறிந்த புனல்வாவி துன்று மருதூ டிருந்த விதியே. (18)

விதியார் கணக்கி லெழுதாம லென்னை விடுவித்தல் வேண்டுமருதப்,பதியாளு முக்கண் மாலிங்க வீசபரமேட்டி கங்கையெனு மா, நதிதாழ் சடைக்கண் மதிவாழ வைத்த நாதாமுன் னால்வர் தெளிய, யதியாகி யாலி னடிவீற் றிருந்து ஞானந் தெருட்டு குருவே. (19)

குருவே யிறப்பி றிருவேமெய்ஞ் ஞான முடையார்கள் பெற்ற குலமே, யருவே விறக்கு முருவே யிரண்டி னமை வேயப் பாலொர் சமைவே, கருவே ரறுத்திங் கெமையாள வேண்டி மருதூடிருந்த கனியே, யொருவேனை யுற்ற கொடு நோய் தணித்துன் னுறுவாழ் வளித்தி டினியே. (20)

வேறு.

இனியந் தகன்வரி லுரையென் சொலவலி ரிடரார் கழிமுடை யுடலாரைப், புனிதந் தருசுக பொருளென் றுனி மயல் பூணு வருணெறி பேணுநீர், தனிதந் தருமுகி லினம்வந் தெழின்மதி றவழுந் திருவிடை மருதூர் வாழ், கனிதன் கழலிணை நனிவந் தனைசெயக் கற்பீ ரேற்புகல் கிற்பீரே.

கிற்பான் மொழிதரு கற்பால் வனிதையர் கிறியார் தருகுறு நகையான்மெய்ப், பொற்பா லிளமுலை வெற்பான் மதர்விழிப் பொலிவா லுளநனி மெலிவேனே, சொற்பால் வழிபடப் புகழே புரிகுடி துறுமுந் திருவிடை மருதூரா, அற்பால் வழிபடு மடியார் கொடுவினை கெடுமா வருள்புரி பெருமானே. (22)

பெருமா மறைமுடி திருநா யகனுயர் பிரமன் முதலிய வுலகியாவு, மொருவா வொருமுழு முதலா மரனடி யுயர்வீ டுறுநசை யுடையோராற், கருதா வழிபட றகுமா லென வுரை கழறு நிலவவு நமர்காணீர், மருதா வெனவெனை யுடையா னடியிணை மருவா துழிதரன் மதியேயோ. (23)

மதியா தவனெரி விழியா னுலகிரு வகையா னிறுவிய தகையானோர், புதியா னினைவரு முதியான் மனமொழி புணரா னொருதனி மருதேயுட், பதியா வுனதுறு கதியா வதைமனம் பற்று யுறுதுய ரற்றுய்காண், விதியா ருற வினும் விழையா விவ்வுரை விடுவா யேனனி கெடுவாயே.

கெடுவே னொருகழி மடவே னுனையுறு கில்லேன்மெய்ந் நெறி கல்லேனு, விடுவே னலனய நடுவே னலனய மீடார் நின்புகழ் பாடாமெய், யடியார் நகைதர நடியா வொழுகுவ னணியார் காவிரி மணிவாரிக், கொடுமா டெறிதிரு விடை மா மருதுறை குழகா நீயெனை முனியேலே. (25)

முனியா யறவர்கள் செறுமா றறிவினை முனைநா ளருளிய குருநாதா, கனிவா யிளமுலை மடவாள் பரமையிற் கடைவா யிலையடை யொருதூதா, பனிவாழ் புனன் முடியுடையாய் திருவிடை மருதூர் வாழ்தரு பரமேட்டி, இனியோ ருறுதுணை யறியே னுனையல திறையே யெனதுறு குறைகேட்டி. (26)

கேட்டி நீபர மேட்டி மருதுட் கிளர்மாமணியே யொரு சோதீ, கூட்டி யென்னைப் புகுவித் தென்னுட் குடிகொண் டோவா தடியேனைக், காட்டிக் கண்கள் காணத் தான் முன் காணும் பருதி யியல்போனின், ருட்டி நீசெய் வினை தா னுன்னை யடையா தென்னை யடைவென்னே. (27)

அடையார் புரமவை பொடியாய் விழமுன மழலார் குறுநகை புரிவோனே, புடையோர் மலைமகள் தழுவுந் திருவுருவுடனே விடைமிசைப் பொலிவோனே, மடைவாய் மிடைகய லுகளும் புனல்வள மருதப் பதிவரு பெருமானே, கடையே னுனதிரு கழன்மே விலன்கொடி யிடையார் மயல்படக் கடவேனோ. (28)

கடமா மதகரி யுரியா யிருவருங் காணா தலமரு மெரியாய் நீள், வடமா மரவடி யுறைவாய் தெளிதமிழ் மதுரைப் பொருணூ லறைவாய்தீ, விடமா ரமுதென மிசைவாய் மறைதிக ழிடைமா மருதிட மிசைவாய்வெம், படமா சுண வணி யரையா யடநமன் படர்கா லொருமொழி யுரையாயே. (29)

உரையோ தொடர்வரி துளமுந் தொடர்வரி துன்றன் னிலையிஃ தால்யானோ, பரையோ டுறுதொடர் புடையே னலனுனைத் தொடருந் திறமெவன் பரமேட்டி, கரையோ

டயல்பொரு திரையோ டிழிதரு கவினுர் காவிரி மருதூரில்,
வரையோ டிகலிள முலேயோ டுறைதரு மணியே யெனே
யுடை மன்னவே. (30)

வேறு.

மன்னே மணிகண்டா வானவர்சூ ளாமணியே
முன்னே முழுமுதலே முக்கட் சிவக்கொழுந்தே
தன்னே ரிலாதவிடை மருதூர்ச் சாமீயுன்
பொன்னுர் கழலிணேயே யெற்குப் புகலேயா. (31)

புகல்புக்க வேழை புலம்பு தவிர்த்திலனு
லிகல்புக்க வெள்விடையோ னென்றிமையோ ரெள்ளி
நகல்புக் கிடாமலரு ளுயகனே செல்வ
மிகல்புக்க மாமருத வேதப் பழம்பொருளே. (32)

பொருளே பொருவிறந்த பொல்லா மணியேநல்
லருளே திருமேனி யாக்கொண் டணிமருதுட்
டெருளார் தரமேய செம்பவளக் குன்றமே
யிருடீர்த் தடியேனே யேன்றுகொள்வ தென்னுளோ.(33)

என்னு யகனே யிமையோர் பெருமானே
பொன்னு ரணிமருதுட் புக்குறையும் பூரணனே
சின்னுட் பலபிணிச் சிற்றறிவேன் மற்றுன்னே
யென்னுட்பன் னூலோதி யேத்தப் பெறுவேனே. (34)

பெறுமா றெவனிற் பிரச மதுமலர்கள்
துறுமா மணிமருதைச் சூழேன் துதியேனுன்
டுறுமா மணியா முனேயன்பிற் காலங்கள்
தொறுமா மலர்தூய்த் தொழூஉத்தொழும்பு செய்யேனே.

செய்யார் கமலக் கரத்தாற் செறிநறவ
மொய்யா ரளிக்கருத்து மூதூர் வயன்மருத
வையா வருமணியே யாரணங்க டேறரிய
மெய்யா மலவிருடான் விடிந்துய்வ தென்றோநான். (36)

நானென் றுணரு முணர்வுக்கு நாடரியான்
தானென் றுணரு முணர்வுக்குத் தானெளியான்
வானென்று காலென்று மாவனனீர் வையமென்று
பாநின்ற பூதந் தருமருதப் புண்ணவனே. (37)

பண்ணார் மொழியுமை பங்கன் பசுபதிதன்
நண்ணா ரரணம் விழநகைத்த நம்பெருமான்
மண்ணோர் புகழ்மருத வள்ளறிற மேயன்றி
எண்ணேன் பிறந்திறக்குந் தேவர் திறமினியே. (38)

இனியோர் குறையெனக் குண்டுகொலெம் மீசனூர்
தனிமா மருதினுண் மேயதனி யோலக்க
நனியாரக் கண்டு நயந்து புகழ்ந்துதலை
குனியா விழுந்திறைஞ்சுங் கொள்கைதலை நின்றேனல்.

நின்றேனின் சன்னிதிக் கென்பிழைக ணீபொறுப்பாய்
குன்றே யிளமுலைக் கோமாட்டி தன்கொழுநா
அன்றே யுயிர்க்காக வைந்தொழி லு மேற்கொண்டோய்
சென்றே மதியணவு மாமருதுட் செல்வமே. (40)

வேறு.

செல்வந்திகழ் பொன்னித்துறை திகழும்மரு தூரா
அல்வந்திவர் தந்தாலென வணிசெய்மணி மிடறு
நல்வந்தனை செய்யேன்முன நமன்வந்துறி னமனென்
சொல்வந்தருள் செய்யாயுறு துணையாகியெற் கவனே.

அவமேயென தறிவைம்புல வடல்வேடரி னறைபோய்ப்
பவமூழ்கிட விடனீபசு பதியேமணி மருதுள்
தவமேயினர் பேருய்மிளிர் சாமீபரை முடியிற்
சிவமேவெறு வெளியேயதிற் றிகழுஞ்சுக விளைவே. (42)

விளைவாகியும் வித்தாகியும் விரவும்பிர பஞ்சங்
கெழுமாவவை தாமாய்நிலை பெறுகின்ற கிரீசா
பழமாமறை வடிவாயுயர் மருதப்பரம் பரனே
அழலாமென வருகூற்றின்முன் னஞ்சேலென வடைவாய்.

அடையாளமன் றுயர்நாவினுக் கரசர்க்கரு ளமலன்
படையோடுறு நமன்முன் றுயர்ப் படுமாறடர்த் திட்டோன்
இடைமாமரு துடையானெனை யுடையானிது வினவீர்
மிடைவீரெனை யடைவானிது மதியோவிரு வினைகாள். (44)

வினையாணையின் வருமென்று விளம்பும்முன தருணூல்
பினையானது தவிருந்திற மெவனோபிறை சூடீ
மனையாதிய சுற்றக்குழு மருவார்பெறும் பேறே
சினையார்மறை மருதுள்ளொளி திகழும்பெருஞ் சோதீ.

சோதித்தனிச் சுடரேயொரு தூண்டாமணி விளக்கே
ஆதித்திரு மூர்த்தீயணி மருதூர்வரு மரசே
பாதித்திரு மேனியுமை பங்காகியுன் வடிவம்
பேதித்தமை யென்னோவிது பேசாயடி யேற்கே. (46)

அடியேன்றவ முடையேனிவ ணணிமாமரு திடங்கொள்
கொடிநேரிடை மடவாளொரு கூறுவுன தெழில்வெண்
பொடியாடவுந்திருவைஞ்செழுத் துரையாடவும்பொருவில்
வடிவார்விழி மணிபூணவும் வரம்பெற்ற நலத்தால். (47)

நலமார்குல மகளுக்கிறை நண்ணும்மொரு பதியே
குலமார்தரு குடிகட்கிறை கோடாநெறி யரசே
நிலையாயொளி தருதத்துவ மாருறுட னிலவும்
பலவாருயிர் தங்கட்கிறை மருதப்பசு பதியே. (48)

பதியிங்கிது பசுவிங்கிவை பாசம்மிவை யவற்றின்
பொதுவிங்கிவைசிறப்பிங்கிவைபுரைதீர்ந்துயிர்சிவத்தைக்
கதுவுந்திற மிதுவென்றுமெய் கண்டானரு ணூலின்
விதிகண்டவ ரன்றேயிடை மருதூரரை மேயோர். (49)

மேனாளொரு மூவருய விட்டுப்புரம் பொடித்த
கோனேயெழின் மருதூருறை கோவேயுனைக் குறிக்கில்
யானேயென வெனதேயென வெழும்போதமக் குறிப்புட்
டானேகலந் தழிக்கும்மது சாடுந்திற மருளே. (50)

வேறு.

அருளேமெய் யானந்த வெள்ள மேசொல்
அளவைகளுக் ககோசரமா யப்பா னின்ற
பொருளேமெய்ப் புண்ணியர்க ளுள்ளத் தூறும்
புத்தமுதே தத்துவங்கண் முப்பத் தாறுந்
தெருளாத புறச்சமயச் சிதடர் நெஞ்சில்
திணியிருளே யுயிரறிவைச் சிதைத்து நின்ற
இருளாம்வன் மலந்துமிய மருதுள் ளோங்கி
எழுஞ்சுடரே யெனைத்துயர்நின் றெடுத்தாட்
[கொள்ளே. (51)

கொள்ளாதே மெய்கண்ட குரவ ரானோர்
கொளுத்துசிவ ஞானமறை மருதன் மாண்பு
விள்ளாத பொய்கண்டா ருரையே கொண்டு
வீடடைய முயறன்மரக் கலத்தி னேறித்

தெள்ளாருந் திரைக்கடலைக் கடந்து சேறல்
சிந்தியார் சிலைப்புணைகொண் டதனை நீந்த
உள்ளார்வங் கொண்டுநனி முயல்வார் தங்கள்
ஊக்கமே போன்மன்ற வுணரின் மன்னே. (52)

மன்னர்தொழ மன்னுமொரு மன்னு யிந்த
வையமுழு தொருகுடைக்கீ ழாண்டென் சீர்த்தி
துன்னுசுரர் தொழப்பஞ்ச தருவி னீழற்
சுரேசனு யரசுவீற் றிருந்தென் றேமில்
நன்னர்மறைக் கிழவனுய்ப் படைத்தென் றண்டேன்
நறுந்துழாய் மோலியெழின் மாலாய்க் காத்தென்
முன்னைமறை மருதவிறை பணியி னிற்பின்
முற்றறிவுற் றழிவின்முத்தி பெறலா கும்மே. (53)

பெற்றபெரும் பொருளதனைச் சிறிதா வெண்ணூஉப்
பெறுதசிறு பொருளதனைப் பெரிதாப் பேணிப்
பற்றிடுபுன் மனக்குரங்கெவ் வண்டந் தோறும்
பாய்ந்துசெல வதன்வழியே போந்து நாளுங்
குற்றமுழு திழைத்தருள்சேர் குணங்க ளொன்றுங்
கூடாமற் புலைநாயேன் வாளா கெட்டேன்
பொற்றொடியோர் பான்மருவு மருத வாண
புரைமனத்தி னுறவறவுட் புகுத ராயே. (54)

புகுதாமே பிறப்பிறப்பிற் றடுத்தாட் கொண்டுன்
பொன்னடிக்கீ ழானந்த போக மாரத்
தகுஞானப் பெருஞ்செல்வ மளித்து னன்பர்
தம்மடியைத் தணவாமெய் வாழ்வு தாராய்
நகுமார வடம்புரளுங் களபக் கொங்கை
நாரியர்க ணடனவொலி கீத வோசை
மிகுதேவர் சுதன்மைவழக் கறுக்க மீப்போய்
விரவுதிரு விடைமருதூர் மேவு மெந்தாய். (55)

எந்தவுடல் வினைக்கீடாத் தந்தா யந்த
உடல்வாழ்வே யெனக்குநல மென்று யான்மன்
புந்திசெய மறைப்பதனைப் புரிந்து ணின்று
பொய்ப்போக மெனக்குநீ யருத்த லெற்சூழ்
மூந்தைமல வலிதொலைத்துன் னருட்கு ளென்னை
மூழ்குவித்துச் சிவபோக முடிவில் வாழ்வு
தந்தருடற் கன்றோநன் மருத வுன்றன்
தடங்கருணைத் திறனெங்ஙன் சாற்று வேனே. (56)

சாற்றுசுரர் நரர்விலங்கு பறவைகளூர் வனநீர்
சரிப்பனதா வரமென்னுஞ் சரமசர மாமேழ்
தோற்றமவை தம்மிலுறு துயரே யன்றிச்
சுகமென்ப தணுத்துணையு மிலைநெஞ்சே சூழின்
ஏற்றில்வரும் பெருமானை யெமக்கினிய மருந்தை
இறையோனை மறையோனை யிமயமலை வல்லி
கூற்றினனை மறைமருதுட் கொழுஞ்சுடராய் நிமிர்ந்த
கோமானை மேவுநெறி கூடல்சுக முனக்கே. (57)

உனக்குறுதி வேண்டின்மட நெஞ்சே நீவா
உதயத்தின் முன்னெழுந்து நியமங்கண் முற்றி
மனக்கினிய தமிழ்மருதன் றிருக்கோயில் சார்ந்து
வணங்கிவலம் வந்துமது மாமலர்கள் குற்றுக்
கனக்குமல ரிண்டைமுதன் மாலைபல சமைத்துக்
காலங்க டொறும்புனைந்து கைதலைமேற் குவியா
எனக்கினிய மாமணியே யெய்ப்பில் வைப்பே
எம்பெருமா னென்றென்று மேத்தா நில்லே. (58)

நில்லாத தேகாதிப் பிரபஞ் சத்தை
நிலையெனவே கருதியுறு சுகம தார
ஒல்லாத வேனிலெழு கான றன்னை
உறுபுனலென் றுனிவேட்கை தணிக்க வோடிச்

செல்லாமெய் வருந்துமொரு மகன்போ னுயேன்
 சென்றெய்த்தேன் றிரிபுரங்கள் செற்ற கொற்ற
வல்லாளா மணிகண்டா வண்ட வாணு
 மலையாட்டி மணவாள மருதச் சோதி. (59)

சோதிகண்மூன் றினுக்குமொளி கொடுப்ப வுன்றன்
 சுடர்விழிக ளேயென்ப தறிந்தோந் தொன்னாட்
பாதியுரு வானவம்மை யவைபுதைத்த போழ்து
 பருதிமதி யெரியொளிபோ யிருண்மறைந்த பரிசால்
ஓதியுருத் திரர்களிவண் மருதூ ருன்னை
 ஓரிரவும் பூசைசெய வுவந்து தோன்றிக்
கோதில்வர மவர்க்கருளி யற்றைநிசி யென்றுங்
 குலவுசிவ நிசியாக்கி யெமையளித்த கோவே. (60)

வேறு.

கோமாட் டிக்கோர் கோமானே கொள்வாய் பூசை செயலெவனோ, தாமாட் டிக்காட் டுநரையின்றி யாடு வாருந் தாமுளரோ, தோமாட் டாச்சிற் றறிவினேஞ்சோதி நிற்பூ சிக்குமுறை, நீகாட் டற்கே நினைந்தன்று செய்தாய் மருதூர் நினைப்பூசை. (61)

நினையார் பிறப்பொ டிறப்பினையு நீக்க மாட்டார் மறைமருதுஞ், சினையா ரந்த மருதினொளி திகழுஞ் சிவனார் திருவுருவுந், தனைநேர் பிராட்டி திருவுருவுந் தனயர் முதலோர் திருவுருவும், எனையா ளுடைய நாயன்மா ருருவுந் தலமு மேனவுமே. (62)

ஏனத் தானு மோதிமமா மிரும்புள் ளானுந் தொடர் வரிய, மானச் சோதி வடிவானை மன்று ணடனம் புரிவா னைக், கூனற் பிறையின் கீறணிந்த கோமான் றன்னை

மறைமருதத், தானத் தானைச் சாராதார் சார்வார் நிரயத் தீநெறிக்கே. (63)

தீதார் புறமாஞ் சமயங்கள் சென்று முன்னர்ச் செய் வினையால், வேதா கமத்துட் புறநெறிக்கண் மேவி யகத்து விரவிப்பின்; மீதாஞ் சைவசித்தாந்த மெய்த்தே சிகன்ற னருள் பெறுமம், மேதா வியரே மறைமருதுண் மிளிருந் தேனைப் பருகுவரால். (64)

பருத்த வாளை யினங்தெங்கம் பழங்க ளுதிர வெழுந் துகளுங், திருத்த மாகும் புனற்படப்பை மருதூர் மேய சிவனேநீ, விருத்த பால குமரனாய் வெண்ணீ றணியுமெய் யடியாள், அருத்து மமுது மிசைந்தருளி யடியார்க்கெளிமை காட்டினையால். (65)

காட்டிற் பேய்க ளுடனுடல் கருதேல் புலியூர் மணி மன்றுள், ஆட்டுப் போது முனக்கெந்தா யடியர் மடத்தைப் பிடுங்கிவெளி, வீட்டைக் காட்டும் பெருமானே விளக்கா யுதவு மொருமாயைக், கூட்டுட் சேர்த்திங் கெமையாட்டு மருதூர் முக்கட் கொழுஞ்சுடரே. (66)

சுடரே மருதுண் மணிவிளக்கே சோற்றுத் துருத்தி தனையோம்பி, இடரே பெருக்கி மடநாயே னெய்த்தே னந்தோ வென்புடனே, குடரே வழும்பே யிறைச்சியே கோதார் மலமே பொதிந்தமுடை,. உடல்வாழ் விதனை யினிவேண்டே னுன்று ணிழலே வேண்டுவனால். (67)

வேண்டத் தக்க தறிவானும் வேண்டும் வரங்க டரு வானும், வேண்டு மடியர்க் கெளியானும் வேண்டிப் பணியி னிறுவும்பேர், ஆண்டா னும்மா மருதனெனை யருளு மது வே யன்றியொன்றை, வேண்ட லாகா தெனுஞ்சுருதி விரும்பார் மருளிற் றிரும்பாரே. (68)

திரும்பார் மனது மறைமருதன் றிருவோ லக்கஞ் சேவிக்க, விரும்பா ரவன்றன் றிருப்பணிகண் மெய்யாற் செய்ய வவர்நெஞ்சம், இரும்போ சிலேயோ மரனேமற் றே தோ வறியே னவரிந்தப், பெரும்பார் தனக்கோர் பார மாய்ப் பிறந்தா ரிருந்து மிறந்தாரே. (69)

இறந்தும் பிறந்து மெனைப்போல விடரின் மூழ்குந் தேவர்தமை, மறந்தும் பொருளா மதிப்பேனே மறைப்பும் பிறப்பு மிறப்புமின்றிச், சிறந்த மருதத் தெளிதேனைத் தெவிட்டா வமுதைத் தீங்கரும்பைக், கறந்தபாலை முக் கனியைக் கண்டைப் பொருளாக் கொண்டேனே. (70)

வேறு.

கொண்டல்வண் ணத்தன் வேதனே முதலோர் குரை கழல் பணிந்துபோற் றெடுப்ப, அண்டர்நா யகனு ரரசு வீற் றிருப்ப வமைந்ததோ ராலய மாகும், பண்டொர்மா முனிவன் குண்டிகை நீங்கிப் பார்வழிச் சையஃின் றிழியுந், தெண்டிரைப் பொன்னித் திருநதி யுடுத்த திருவிடை மருதமா நகரே. (71)

நகருளே நம்பர் திருவிடை மருதநகர்மிகச் சிறந்ததாம் வேதம், பகருமந் திரத்து ளுருத்திர மனுவும் பழிப்பின் மெய்த் துறவருண் ஞானச், சுகருமெய்ந் நாயன் மார்களுட் சமய குரவர்க ளுல்வருந் தொல்லோர், நிகரில்பா டியத் துட் சிவஞான யோகி நிறீஇயமா பாடிய மும்போல்.(72)

இயம்புறு மறையே யிவண்டிரு மருதா மிதன்மலி சாகையுங் கிளையு, நயம்பொலி யரும்பு மலர்களும் பிஞ்சு நயப்புறு காய்களும் பிறவும், பயம்படு மறையின் பகுதிக ளாகும் பராரைவாழ் பொந்துவே தாந்தச், சயம்படு தகர முள்ளறி வாகித் தழைக்குந்தேன் றனிப்பர சிவமே. (73)

சிவந்திக ழறிவொர் சிறிதுமில் சிறியேன் செப்புசிற் றுரையினுட் படுமே, தவந்திகழ் ஞான சம்பந்தர் நாவுக் கரயரே தம்பிரான் றோழர், பவந்துரந் தருளும் வாதவூ ரடிகள் பட்டணத் தடிகளே முதலோர், உவந்தரு ளிய மெய்ம் மறைத்திரு வாக்கி னுட்படு மருதவுன் னுயர்வே.

உயர்சிவ ஞான வாழ்வுபெற் றுடையோ ருறைதிரு மடங்களு முள்ளத், தயர்வற யோகங் கிரியைநற் சரியை யாற்றுந ரிடங்களு மிணங்கு, மயறபு வேத முற்றொருங் குணர்ந்தோர் மந்திரங் களுந்தமீஇ யோங்குந், துயர்தபு மருத வாணனு ரடிசேர் தூயவ ருருரவத் தைகளே. (75)

அவத்தைக ளைந்து நமக்குநீ விளைத்து மவத்தைக ளொன்றினும் படாதோய், சிவத்தைமுன் னுக்கொண் டைந்தெழுத் துணர்வோர் சிந்தைவாழ் செல்வனே முத லூற், பவத்தையும் புனருற் பவத்தையும் புரியும் பரமனே மருதமா மணியே, தவத்தையே யறியே னவத்தையே புரிவ னெனினுநீ கைவிட றகவோ. (76)

தகுதிசேர் குணங்க ளில்லவ ரேனுஞ் சாதியா லிழிந் துளாரேனு, மிகுதிசேர் மருதன் விரைமலர்த் தாளின் மிக்கநற் பத்தியொன் றுநரேற், பகுதிசே ரண்டப் பரப் புளார் வணங்கும் பண்ணவ ராவரிங் கவரே, விகுதிகள் புகுதா ருடல்பொறி விடய மேவினு மேலவ ரம்மா. (77)

அம்மையிற் பிறப்பொன் றடைவரோ வருண்மெய் யானந்த வாழ்வுபெற் றமர்வர், உம்மையிற் புரிந்த நல் வினைப் பயத்தா லொப்பிலா மாணிக்க மலையைச், செம் மையிற் கண்ணூர் நடமரு வீதித் திருவிடை மருதமா நிதி யை, இம்மையிற் பெற்றோ மென்றுகண் டிறும்பூ தெய்தி வாழ் ஞானமா தவரே. (78)

மாதவம் புரியா மலைக்குகை யாதி வதிந்துமெய் வருந் துமா முனிகாள், சீதரன் முதல தேவர்கண் மிடையுந் திருமலி திருவிடை மருதூர்ப், போதரா வங்கண் மாலிங்க மணிதன் பொன்னடித் துணைதொழூஉ விருந்தே, ஆதரம் பெருக வவன்றிருப் பணிக ளாற்றுமின் மாற்றலாம் பிறப்பே. (79)

பிறந்திடா வாழ்வெற் கருளிட வேண்டும் பிறப்பி னில்விடுவையேற் றலத்துட், சிறந்தநின் செல்வத் திரு விடை மருதூ ரெல்லையு ளுன்றிரு வடிகண், மறந்திட வாராச் சனனமற் றென்றே வழங்குதி மாலிங்க மணியே, அறந்திக ழறுபான் மூவர்வாய் மடுத்துண் ணுனந்த மாப் பெருங் கடலே. (80)

வேறு.

கடலிற் செல்லுங் கலத்தி லுயிரென
உடலிற் புக்குக் கலங்குவ னேகரைத்
திடரிற் பூகஞ் செழுங்குலைத் தேனனி
மடலிற் சாய்க்கு மருதப் பரமனே. (81)

பரமு னக்குமு னன்பிற் பணியவென்
சிரமு னக்குத் தொடுத்திடத் தேமலர்
கரமு னைத்தரி சித்திடக் கண்கணல்
வரமெ னக்கருள் வாய்மரு தீசனே. (82)

ஈச னெந்தை மருத னிணையடிக்
காசை பூணலை யைம்புல வேடரை
நேச மோடு மளவளாய் நித்தலு
மூசல் போல வுழலுவை நெஞ்சமே. (83)

நெஞ்ச மேயினை நீமரு தன்சடைப்
புஞ்ச மும்விழி மூன்றும் புயங்களுங்
கஞ்ச நேரு முகமுங் கரங்களு
நஞ்ச மாரு மிடறுநற் றாளுமே. (84)

தாளு வந்திறைஞ் சத்தமி யேனையும்
ஆளு நாயக னேமரு தப்பனே
நாளு லந்துட னுன்விடும் போதருள்
வாழு நின்கணர் வந்தெனைப் பற்றவே. (85)

பற்றி லாமரு தன்னடிப் பற்றையே
பற்றி நீயிரு பற்றிரண் டும்மறச்
சுற்ற மென்று மயலென்றுந் தோன்றும்போ
துற்ற மெய்யென்றும் பற்றலை யுள்ளமே. (86)

உள்ளே தேயுள தூழி னளவினுற்
பள்ள நீரினிப் பார்முழு தோடினு
மள்ள ரோசை யருவயன் மாமரு
துள்ள வீச னொருவ னருளினால். (87)

அருளை நாடி யனைத்துயி ருந்தமிற்
றெருளி னேம்புநர் சேர்வர் மருதனை
மருளி னேடி வதைத்துயி ரூனுணுந்
தெருளி றீங்குநர் சேர்வர் நிரயமே. (88)

நிரய மென்னினு நெஞ்சு துணுக்குறுக்
கரையில் வெந்துய ரக்கடன் மூழ்குவேன்
விரைசெய் மாமரு தாவவண் விட்டிடேல்
புரையி னேன்செய் பிழைகள் பொறுத்திநீ. (89)

பொறுத்தி யெந்தையெர் புந்தியி லேன்பிழை
வெறுத்தெ னேமுனி யேலுனே வேண்டினேன்
கறுத்த கண்டனே காலற்கொர் காலனே
துறுத்த சாலி வயன்மரு தூரனே. (90)

வேறு.

தூரமா யென்போல் வார்க்குச் சமீபமாய்த் தோமில் வாய்மைக், கீரனே முதல சங்கப் புலவர்க்குக் கிளர்மெய் யெந்தாய், சீரனே கங்குலாவுந் திருவிடை மருதூர்ச் செல்வா, ஆருனை யறிய கிற்பா ரறிவித்தா லன்றி நீயே. (91)

நீயது வாதி யென்று நீண்மறை முடிவி லோங்குந்
தூயமா வாக்கி யஞ்சொல் சுத்தவத் துவித வுண்மை
பாயசீர் மருத வாணர்ப் பழிச்சுமஞ் செழுத்தோ ருண்மை
நாயன்மார் தெளிவ ரன்றித் தெளிவரோ நலமி லேனோர்.

ஏனத்தாற் றெடரொ ணுயொ ரேனத்தைத் தொடர்ந்து போந்த, மானச்சீர்த் திண்ண ஞர்க்கு வெளிநின்ற வகைமற் றென்னே, வானத்தா ராசை யுள்ளார் மண்ணகத் தார்வ ணங்குந், தானத்தாற் சிறந்த தெய்வத் திருவிடை மருத சாமீ. (93)

சாமகா னங்க ளோதிச் சார்தர மறையோ ரன்பர், நாமகா னங்க ளுண்மை நாயன்மார் தமிழ்வே தங்கள், தாமன வன்பிற் பாடத் தனிப்பெரு மருத வாணர், மாமக விழாக்கொள் காட்சி காணின்வான் வீட ணித்தே. (94)

அணிவிழ வருத வீதி மருதனே யையா மந்தப், பிணியினாற் பொறிக லங்கப் பெரிதிடர் புகுதுமன்றும், எணிநிய மம்வ பூாதியான் பூசனை யினிது ஞற்றிப், பணிபிற முடிக்கு முன்னர் மாற்றலிப் பையுள் வாழ்வே. (95)

வாழ்கமா மருத வாணர் வாழ்கமற் றவர்பி ராட்டி
வாழ்கமற் றவர்கு மாரர் வாழ்கமற் றவர்தங் கோயில்
வாழ்கமற் றவர்தஞ் சீர்த்தி வாழ்கவை திகநற் சைவம்
வாழ்கநீ டூழி யன்னோர் மாண்புடை யடியார் மன்னோ.

மன்னுமா மருதி னுள்ளே வளருமா மணியே யீன்ற,
அன்னையு மத்தன் றானு மாருயிர்த் துணையு நீயே, உன்
னடிக் கன்பே நல்கி யுறுபெருங் கருணை செய்வாய், துன்
னிய சுற்ற நட்டோ ருயக்கொண்டு துறக்கு மாறே. (97)

துறப்பெனும் புணையி லேறித் தூயமெய் யுணர்வு
தூண்ட, அறப்பெரு மருத வுன்ற னடிநிழல் சேர வெண்
ணேன், இறப்பொடு பிறப்பென் றேது மிருசிறை யுடற்
புள்ளூர்தந், துறப்பெரி துழல்வே னல்கி டுன்னடி சேரு
மாறே. (98)

சேரலாம் வீடு மங்குச் சிவனுமா னந்த வெள்ளம்,
ஆரலா மெய்ப்பில் வாழ்வி லமரலா மடிய ரோடு, தீரலாம்
பிணிக ளிங்குத் தெவிட்டலாஞ் செல்வ வாழ்விற், பாரி
லாஞ் சீர்த்தி பாடி மருதனார் பணிகள் செய்யின். (99)

செய்யவ ளுவந்து வைகுந் திருவிடை மருதூர் வாழும்
ஐயர்வே தாக மத்தி னருச்சனை விழவு மல்க, வையகம்
புரக்கு மன்னர் மன்னறந் தழைக்க வன்னோர், பொய்
யில்பே ரருளாற் றிங்கட் பொழிகமும் மாரி காரே. (100)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி முற்றிற்று.

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

குருமரபு வாழ்த்து.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ.

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ், கும்பகோணம்.

4A
3-84